# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 20 வியாழக்கிழமை 04.07.2024 கதிர் 290









# ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி களத்தில் இறங்கும்!

## தே.ம. சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி ஒரு தரப்பாக தலையிடும் எனவும், இதற்கான சட்ட உதவிகளை பெறுவது குறித்து ஆலோசித்து வருகிறோம் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

2➤

## தமிழரசின் தலைமை அலுவலகத்தில் சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலிப்பு





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடலுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு இன்று காலை எடுத்து வரப்பட்ட சம்பந்தனின் புகழுடல் அங்கிருந்து கார் மூலம் யாழ். மார்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது சம்பந்தனின் புகழுடலுக்குத்

2➤





## யாழில் சம்பந்தனின் புகழுடலுக்கு பலரும் அணிதிரண்டு அஞ்சலிகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் இன்று யாழ்ப்பாணத்தில் மக்கள்

2➤

## அரச சேவையில் பணியாற்றும் கட்டட, இயந்திர, மின்சார பொறியியலாளர்கள் 500 பேர் நாட்டிலிருந்து வெளியேற்றம்

### அரச சேவை பொறியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் குமுதுலால்

அரச சேவையில் பணியாற்றும் கட்டட, இயந்திர, மின்சார பொறியியலாளர்களில் 500 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும், இன்னும் 100 பேர் இந்த வருடம் வெளிநாடு செல்ல உள்ளனர் எனவும் அரச சேவை பொறியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் குமுதுலால் தெரிவித்துள்ளார்.

பொதுவாக அரச சேவையில் கட்டட, இயந்திர, மின்சார பொறியியலாளர்கள் 1520 பேர் இருக்க வேண்டும் எனவும், ஆனால் தற்போது ஆயிரத்துக்கும் குறைவானவர்களே பணிபுரிகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், சேவையில் இணையும் அனுபவம் வாய்ந்த பொறியாளர்கள் 4 - 5 வருடங்கள் கழித்து நாட்டை விட்டு வெளியேறுவது பெரும் பிரச்சினையாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொறியியல் பட்டப்படிப்பை 130 வெளிநாடுகள் அங்கீகரிப்பதாகவும், எந்தவொரு பரீட்சையும் எழுதாமல் வெளிநாட்டில் பணியாற்றுவதற்கு இலங்கையின் பட்டம் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் அவர் வலியுறுத்தினார்.

பொறியியலாளர் பற்றாக்குறையால் பெருமளவுநிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட ஏரிகள், கால்வாய்கள், கட்டடங்கள் ஆகியன முறையாக பராமரிக்கப்படாமல் அவற்றை சீரமைக்க அதிக பணம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெஜ-11)

## வடக்கில் பதிவு செய்யாது இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கு வடமாகாண ஆளுநர் ஆலோசனை வழங்கினார்!

யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் ஆட்கள் தங்குவதற்கு உகந்ததல்லாத இடத்தில் சிறுவர் இல்லங்கள் நடத்தி வந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த தை மாதம் 3 மலையக மாணவர்களுடன் ஆரம்பமான ஒரு சிறுவர் இல்லம் கடந்த மே மாதம் மேலும் 3 மலையக மாணவர்கள் இணைக்கப்பட்டு 6 மாணவர்களுடன் ஒரு சிறுவர் இல்லம் நடத்திச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர் இல்லம் நடத்தி செல்லப்பட்ட வீடு பாழடைந்த நிலையில் காணப்படுவதுடன், ஜன்னல்களுக்கு கதவுகள் அற்ற நிலையில், மாணவர்கள் கட்டில் வசதிகள் இன்றி நிலத்திலையே படுத்து, உறங்கி எழும்பும் நிலை காணப்பட்டுள்ளது.

அத்துடன் மலசல கூட வசதிகள் மற்றும் குளியல் என்பவற்றுக்கு மாணவர்கள், குறித்த வீட்டில் இருந்து சற்று தொலைவில் பிறிதொரு காணிக்கே செல்ல வேண்டிய நிலையும் இருந்துள்ளது.

அதேவேளை தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அருகில், யூனியன் கல்லூரிக்கு

2➤

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் புகழுடல் இன்று காலை கொழும்பில் இருந்து விசேட விமானம் மூலம் பலாலி விமான நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் முற்பகல் 10.15 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதன்போது சம்பந்தனின் புகழுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு கௌரவம் செலுத்தப்பட்டதோடு தலைமைக் காரியாலத்தில் கட்சிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

அதன் பின்னர் இரா.சம்பந்தனின் புகழுடல் யாழ். நகர் பகுதியூடாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் அஞ்சலிக்காக வைக கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சார்ள்ஸ், இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தர்மலிங்கம் சித்தார்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர்.

சம்பந்தனின் புகழுடல் நாளை காலை யாழ்ப பாணம் பலாலி விமான நிலையத்தில் இருந்து திருகோண மலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெற வுள்ளன என்று ஒழுங்கமைப்பாளர்கள் தெரி வித்தனர்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில், ஜனாதிபதியை தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருக்கும் சதித்திட்டத்தை முன்னிறுத்தி தேர்தலை ஒத்திவைக்குமாறு உச்ச நீதிமன்றில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக இதனை தோற்கடிக்க முடியும் என்ற வலுவான நம்பிக்கை இருப்பதாகவும், மனுவுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி தலையீடு செய்ய தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி சதி தோற்கடிக்கப்படுவது மட்டுமன்றி இந்த நயவஞ்சக கும்பலும் ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்படும் என குறிப்பிட்ட அனுரகுமார திசாநாயக்க, மக்களிடையே குழப்பம் மற்றும் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்தும் நோக்கிலான இத்தகைய முயற்சிகள் குறித்து பொதுமக்கள் குழப்பமடைய வேண்டாம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-10)

## தமிழரசின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் மூத்த தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், ஏனைய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்குக்குக் கொண்டு செல்லப்பட்ட சம்பந்தனின் பூதவுடலுக்கு இன்று மாலை 4 மணி வரை அஞ்சலி செலுத்த முடியும் என்று தமிழரசுக் கட்சியினர் அறிவித்திருந்தனர்.

இதேவேளை, சம்பந்தனின் இறுதிக்கிரியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது. (05)

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சொந்தமான வீடொன்றில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் 12 மலையக மாணவர்களுடன் ஒரு சிறுவர் இல்லம் நடத்திச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ள 12 மலையக மாணவர்களும் யூனியன் கல்லூரி மாணவர் விடுதிக்கு மாணவர்கள், விண்ணப்பிக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அந்த மாணவர்கள் யூனியன் கல்லூரியின் பெறுப்பில் இல்லாதது தனி நபர்களின் பொறுப்பிலையே தங்கியுள்ள நிலையில், எவ்வாறு யூனியன் கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்களை இணைக்கும் விண்ணப்பம் நிரப்பட்டு மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்? என்பது தொடர்பில் தெளிவாக அறிய முடியாத சூழல் காணப்படுகிறது.

அதேவேளை, குறித்த சிறுவர் இல்லம் வடமாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யாது சட்டவிரோதமாக இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரண்டு சிறுவர் இல்லங்களை சேர்ந்த 16 மாணவர்களும் முன்னர் கற்ற பாடசாலைகளில் இருந்து விடுகைப் பத்திரங்கள் பெற்று, முறைப்படி யூனியன் கல்லூரியில் இணைத்து கொள்ளப்படாமல், தாற்காலிகமாகவே இணைத்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இந்நிலையில் வடக்கில் பதிவு செய்யாது இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கு வடமாகாண ஆளுநரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து, வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில்தங்க வைக்க அனுமதிவழங்க வேண்டாம் எனவும், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளை பின்பற்றி அவர்களை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளதாகவும் அறியக்கிடைத்தது.

(01)



# சம்பந்தனின் புகழுடலுக்கு வடக்கு ஆளுநர் அஞ்சலி!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர் அமரர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் புகழுடலுக்கு இன்று மரியாதை செலுத்தியதுடன், அவரின் உருவப்படத்துக்கும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

அமரர் சம்பந்தனின் உறவினருடன் ஆளுநர் தனது அனுதாபங்களையும் பகிர்ந்துகொண்டார். (05)

# அரச வங்கி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



*நுவரெலியா பிரதான நகரில் உள்ள அரச வங்கி ஊழியர்கள், நுவரெலியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக ஒன்றிணைந்து சம்பள உயர்வைக் கோரி இன்று மதிய நேரத்தில் அடையாள கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.*

*“நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரச வங்கி ஊழியர்களுக்கு வரிச்சுமைக்கு ஏற்ற சம்பள உயர்வு அவசியம், ஏனைய அரச ஊழியர்கள் போல் எங்களுக்கு அனைத்து சலுகைகளும் அவசியம், அரச வங்கிகளின் சம்பள அதிகரிப்பை உடன் உயர்த்துங்கள்” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*அரசுவங்கிஊழியர்களின்கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க விட்டால் நாடு முழுவதும பாரிய போராட்டங்களை நடத்த இருப்பதாகவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் எச்சரித்தனர்.*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் ஓய்வு பெற்றுச்சென்ற ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு





(எம் எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஆசியர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (03) பிரதி அதிபர் எம்.எச். றசாமின் ஒருங்கமைப்பில், அப்பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அதன் அதிபர் ஏ.எல்.பாயிஸ் தலைமையில் இடம் பெற்றது.

அத்தோடு பிரதி அதிபர்களான ஏ.ஜி. சமூர், எம்.ஏ. உனைஸ் ஆகியோர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

ஓய்வு பெற்றுச்சென்ற ஆசிரியர்கள் நினைவுச்சின்னம், வாழ்த்துப்பா என்பன வழங்கிக் கௌரவிக்கப பட்டனர்.

# விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

(சர்ஜூன் லாபீர்)

ரண்விமன, ஜெயவிமன தேசிய விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சம்மாந்துறை-7, செந்நெல் கிராமம், மட்டக்களப்பு தரவை-02 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் 4 வீடுகளுக்கான அடிக்கல்நடும்நிகழ்வு இன்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலக சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் /ஹசைனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் கலந்து கொண்டு வீடுகளுக்கான அடிக்கல் நட்டதோடு, காசோசலையினையும் வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வில் கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி அகமட் சாபீர், சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் , சமூர்த்தி திட்ட, வலய, அபிவிருத்தி முகாமையாளர்கள், முன்னாள் சமுர்த்தி முகாமையாளர் உட்பட கிராம சேவகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# புதிய கிராம சேவகர்களுக்கான வரவேற்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்ட 8 பயிற்சி கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான அறிமுக நிகழ்வு இன்று பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில், கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சி அகமட் சாபீர், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளீர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்./ஹசைன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வீழ்ந்து கிடந்த நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்கலை ஊழியர்களின் கோரிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்!

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன்






(மாளிகைக்காடு செய்தியாளர்)

அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் சிக்குண்டு தவித்துக் கொண்டிருந்த நமது நாட்டை, தனியாக வந்து மீட்டெடுத்து நாளுக்கு நாள் முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்லும் ஜனாதிபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், கடந்த 65 நாட்களுக்கு மேலாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கும் பல்கலைக்கழக ஊழியர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வைத் தர முன்வரவேண்டும்!, என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டம் 65 நாட்களையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய தினம் தென்கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் ஊழியர்கள் முன்னிலையில் உரையாற்றும்போதே ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் இவ்வாறு தெரிவித்தார்.

வங்குரோத்தடைந்திருந்த நாட்டை மீட்ட ஜனாதிபதி அவர்கள், பொருளாதார ரீதியில் வங்குரோத்தடைந்திருக்கும் பல்கலைக்கழக ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் விரைந்து தீர்வைப் பெற்றுத்தர முன்வர வேண்டும், என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்த போராட்டத்தின் காரணமாக கடந்த 65 நாட்களுக்கு மேலாக பல்கலைக்கழகங்கள் மூடிக் கிடக்கின்றன. அதன் காரணமாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இவைகள் தொடர்பிலும் ஜனாதிபதியும் அரசாங்கமும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகம்மது காமில், நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை என்றும் எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டு செல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகிறது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளமை அப்பட்டமான உண்மை என்றும் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக கட்டமைப்பில் பட்டதாரிகளை உருவாக்குவதில் கல்வி சாரா ஊழியர்களின் பங்கு என்பது பிரதானமான ஒன்று. இவ்வாறான சூழலில் மாணவர்கள் கூட கருத்து எதையும் கூறவில்லை என்றும் கல்விசார் ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்களின் விடயத்தில் பாராமுகமாக இருப்பது கவலையாளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாங்களும் பல்கலைக்கழக செயற்பாட்டுக்கு பங்களிப்பவர்கள் என்பதை குறித்த தரப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும். அத்துடன் எங்களது கோரிக்கைகள் தொடர்பில் அரசுக்கு அனைவரும் அழுத்தங்களைப் பிரயோகிக்க முன்வர வேண்டும்!, என்றும் கேட்டுக்கொண்டார்.

## இந்திய – சீன வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு!



சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்யியும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் இன்று கஸகஸ்தானில் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கஸகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 24 ஆவது உச்சி மாநாடு நேற்று (03) ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் பங்கேற்க இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சென்றுள்ளார்.

இந்நிலையில், சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்யி-யை, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியா – சீனா இடையே எல்லைப் பிரச்சினை நீடித்து வரும் நிலையில், குறித்த இரு நாட்டு அமைச்சர்களும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இருவரும் எல்லைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து சிறிது நேரம் கலந்துரையாடியதுடன், புகைப்படமும் எடுத்துக்கொண்டனர். (04)



## உலகக் கிண்ணத்துடன் நாடு திரும்பிய கிரிக்கெட் வீரர்கள் இந்தியப் பிரதமர் மோடியையும் நேரில் சந்தித்தனர்!

*ரி-20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் வீரர்கள் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றுள்ளனர்.*

*கடந்த சனிக்கிழமை மேற்கிந்தியத் தீவுகளின் பார்படோஸில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ண இறுதிச் சுற்றில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி இந்திய அணி சம்பியன் பட்டத்தை வென்றது.*

*இரண்டாவது முறையாகவும் ரி-20 உலகக் கிண்ணத்தை தன் வசப்படுத்திக்கொண்ட இந்திய அணிக்கு, அட்லாண்டிக் பெருங்கடலில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக தாயகம் திரும்புவதில் சிக்கலான சூழல் ஏற்பட்டது.*

*இந்நிலையில், வானிலை சீரானதை தொடர்ந்து நேற்று (03) பிற்பகல் பார்படோஸில் இருந்து தனி விமானம் மூலம் இந்திய வீரர்கள் புறப்பட்டு இன்று காலை 6 மணியளவில் டெல்லியை சென்றச்டைந்தனர்.*

*இதன்போது, டெல்லி விமான நிலையத்தில் குவிந்த இரசிகர்கள் இந்திய வீரர்களுக்கு வரவேற்பளித்தனர். அதன் பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் நேரில் சந்தித்துள்ளனர்.*

*உலகக் கிண்ணத்தை பிரதமர் நரேந்திர மோடியிடம் கொடுத்து வாழ்த்துப் பெற்ற வீரர்கள், அதனையடுத்து அவர் அளித்த விருந்திலும் பங்கேற்றிருந்தனர்.*

*(04)*

# சிலோன் மீடியா போரத்தின் ஐந்து வருட நிறைவு சிறப்பு நிகழ்வுகள் ஆரம்பம்






(மாளிகைக்காடு செய்தியாளர்)

சிலோன் மீடியா போரத்தின் ஐந்து வருடப் பூர்த்திக் கொண்டாட்ட நிகழ்வை முன்னிட்டு விசேட இலச்சினை அறிமுக விழாவும் ஹஜ் பெருநாள் கொண்டாட்ட நிகழ்வும் நேற்று (03) இரவு புதன்கிழமை சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ. மஜீத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.எம்.எம். அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து சிலோன் மீடியா போரத்தின் விசேட இலச்சினையினை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வுக்கு விசேட அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கௌரவ அதிதிகளாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாட்டு மாநில உதவி செயலாளர் எஸ்.ஏ.எம்.இப்றாகிம் மக்கி, சிரேஷ்ட ஊடகவியலாளர் திருச்சி எம்.கே.சாகுல் ஹமீத், திருநெல்வேலி தனியார் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.நெய்னார் முஹம்மட் கடாபி, ஏ.பி.எஸ். தனியார் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஏ.அஷ்ரஃப் அலி, சமாதான ஊடக அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம்.ஜெஸ்மின், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் சாதிக் ஷிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இதில் தனியார் உயர்கல்வி நிறுவன தவிசாளர் கலாநிதி எம்.எம்.முனாசிக், சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் முன்னாள் செயலாளர் தொழிலதிபர் இக்ரா ஜலால், சிலோன் ஜேனலிஸ்ட் போரத்தின் செயலாளர் எஸ். அஷ்ரஃப் கான், நுஜா ஊடக அமைப்பின் உறுப்பினர் பீ.எம். றியாத், சிலோன் மீடியா போரத்தின் செயலாளர் ஏ.எஸ். எம்.முஜாஹித், பொருளாளர் நூருல் ஹுதா உமர் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் சிலோன் மீடியா போரம் கடந்த ஐந்து வருடங்களில் ஆற்றிய பணிகள் பற்றிய விசேட உரையினை போரத்தின் பொருளாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான நூருல் ஹுதா உமர் நிகழ்த்தினார். மேலும் நிகழ்வின் பிரதம அதிதி இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாட்டு மாநில செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.எம்.எம். அபூபக்கரினால் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ. மஜீத் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாட்டு மாநில செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.எம்.எம். அபூபக்கர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாட்டு மாநில உதவி செயலாளர் எஸ்.ஏ.எம். இப்ராஹிம் மக்கி, சிரேஷ்ட ஊடகவியலாளர் திருச்சி எம். கே .சாகுல் ஹமீத், திருநெல்வேலி அலி சன்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.நெய்னார் முஹம்மட் கடாபி உள்ளிட்டோர் சிலோன் மீடியா போரத்தின் உறுப்பினர்களால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது சிலோன் மீடியா போரம் கடந்து வந்த பாதை எனும் தலைப்பில் குறுந்திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

# புத்தளம் மாவட்டத்தில் புதிய மீனவ தொழிற்சங்கக் கிளை



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தில் 2018 இல் மீனவ தொழிற் சங்கம் பதியப்பட்டு இருந்த நிலையில் புத்தளம் மாவட்டத்திற்கான கிளை ஒன்று காணப்படவில்லை. இதன் அடிப்படையில் கடந்த வியாழக்கிழமை (27) தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் புத்தளம் மாவட்ட இணைப்பாளர் ஜே.பத்மநாதன் தலைமையில் செயற்பாட்டாளர் ஜனாப் இஜாஜ் இன் பங்குபற்றுதலுடன் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் அம்மாதோட்டம், உசுலன் தீவு உப மீனவ கிராமத்தில் புத்தளம் மாவட்ட மீனவ தொழிற் சங்க கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது உரையாற்றிய மாவட்ட இணைப பாளர் ஜே.பத்மநாதன், மீனவர்கள் தம்மை அடையாளப்படுத்துவதற்கு இதுவரை காலமும் அரசினால் அறிமுகப்படுந்தப்பட்ட கிராமிய அமைப்புக்கள் மற்றும் மீன்பிடி கூட்டுறவு அமைப்புக்கள் என்பன ஊடாகவே மீனவர்கள் தமது பிரச்சினைகளை சுட்டிக்காட்டியும் அரச உதவிகளை பெற்றும் வந்துள்ளனர். எனினும் பொதுப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையே காணப்பட்டது.

இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி மாவட்ட தொழிற் சங்க கிளையின் ஊடாக மீனவர்கள் தமது பிரச்சினைகளை சுதந்திரமாக வெளியிடுவதுடன் தமது பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேட முடியும் எனவும், உதாரணமாக தற்போது பிரகடணப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ள புதிய மீனவச் சட்டத்தில் பல விடயங்கள் சிறு மீனவர்கள் உட்பட ஆள் கடல் மீனவர்கள் என சகலரையும் பாதிக்கக் கூடிய விடயங்கள் உள்ளடங்கியுள்ளதாகவும் சமூக நிறுவனங்கள் கூறி வருகின்றன. அவைகளுக்கு எதிராகவும் சுதந்திரமாகவும் நடவடிக்கைகளை மீனவர்கள் மேற்கொள்ள இம் மாவட்ட தொழிற் சங்கம் பெறும் உதவியாக அமையும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கிராமிய மீனவ சங்கத்தின் தலைவர் சாந்தன் ஜூட், மீனவ கூட்டுறவு சங்கத் தலைவர் ரகுநாதன் மற்றும் எம்.எச்.எம் றிஸ்வான் ஆகியோரும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து புத்தளம் மாவட்ட மீனவ தொழிற் சங்கத்திற்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. தலைவராக சாந்தன் ஜூட், செயலாளராக ரகுநாதன், பொருளாளராக எம்.எச்.எம் றிஸ்வான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



# பாடசாலைகளுக்கிடையிலான ரக்பி போட்டிகள் ஒத்திவைப்பு

2024 ஆம் ஆண்டிற்கான பாடசாலை ரக்பி லீக் தொடரின் ,ந்த வாரத்திற்கான அனைத்துப் போட்டிகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரக்பி நடுவர்கள் எதிர்வரும் ,ரண்டு வாரங்களுக்கு போட்டிகளில் பங்கேற்காமல் ,ருப்பதற்கு தீர்மானித்துள்ளமையினால், பாடசாலைகளுக்கிடையிலான அனைத்து ரக்பி போட்டிகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை போட்டிகளில் பங்கேற்காமல் ,ருப்பதற்கு ,லங்கை ரக்பி கால்பந்து நடுவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கல்கிசையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி கல்கிசை புனித தோமஸ் கல்லூரி மற்றும் கல்கிசை அறிவியல் கல்லூரிகளுக்கு ,டையில் நடைபெற்ற ரக்பி போட்டி நிறைவடைந்ததன் பின்னர், நடுவர்களின் தீர்ப்பில் அதிருப்தியடைந்த அறிவியல் கல்லூரியின் ஆதரவாளர்களினால் நடுவர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக ,ந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நடுவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் கல்கிசை பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், ,லங்கை பாடசாலைகளின் ரக்பி சம்மேளனம் சுயாதீன விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளது.

இலங்கை ரக்பி கால்பந்து நடுவர்களிடம் ,லங்கை பாடசாலைகளின் ரக்பி கால்பந்து சம்மேளனம் மன்னிப்புக் கோரியுள்ளதுடன், நடுவர்கள் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது. (04)


கோப்புப்படம்







## அரச அச்சகத்துறை ஊழியர்களுக்கான ஊக்கத்தொகை யோசனையானது தேர்தலை ஒத்திவைக்கும் சூழ்ச்சியாகும்!

### அரச அச்சகத் தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு





அரச அச்சகத்துறை ஊழியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ள யோசனை முற்றிலும் குளறுபடிகளைக் கொண்டுள்ளதாக உள்ளது என தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

அரச அச்சகத்துறை ஊழியர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவையால் முன்வைக்கப்பட்ட ஊக்கத் திட்டமானது ஊழியர்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட ஒன்றாக இருப்பதாக தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவற்றின் அடிப்படையில் ஊழியர்கள் மத்தியில் அமைதியின்மை சூழலை உருவாக்கி தேர்தல் அச்சடிப்பு வேலைகளை தடுத்து தேர்தலை ஒத்திவைக்கும் சதித் திட்டத்துடனேயே ,வ்வாறு குளறுபடிகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன. எனவே, மேற்படி குளறுபடிகளைக் கொண்ட ஊக்கத் திட்டத்தை ,ன்னும் 6 மாதங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் எனவும் தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்வரும் தேர்தல்களில் அரசாங்க அச்சகத் திணைக்களம் முக்கிய பங்கினை வகிக்க உள்ளதாகவும், இத்தகைய நிலையில் ஊழியர்களுக்கான ,ந்த குளறுபடிமிக்க பிரேரணை திணைக்களத்தின் கடமைகளை சரிவர நிறைவேற்றுவதில் தடையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ரெஜ-09)

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று செயலகத்தில்!



கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது. கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் முரளிதரன், தான் மாவட்ட அரசாங்க அதிபராக நியமனம் பெற்ற பின்னர் நடைபெறும் முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

குறித்த கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ,ராமநாதன், கிளிநொச்சி மாவட்ட அதிபர் முரளிதரன், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், வடமாகாண அமைச்சு சார்ந்த திணைக்களங்களின் பணிப்பாளர்கள், ,ராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் ,ணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், மாவட்ட திணைக்களங்கள் சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.








## அதிகாரிகளுக்கான கௌரவிப்பும் சங்கப் பதிவுச் சான்றிதழ் வழங்கலும்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் ஜனாதிபதி மாவத்தையில் உள்ள சூரிய பெண்கள் அபிவிருத்தி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச அதிகாரிகள் கௌரவிப்பு மற்றும் சங்கத்தின் பதிவுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (01) கிராம சக்தி கட்டிடத்தில் சங்கத்தின் தலைவி எம்.எஸ் ஹசீனா தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் கற்பிட்டி பிரதேச செயலாளர் சார்பாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் இருவரும் கலந்து கொண்டனர்.

இக்கிராமத்திற்கான அபிவிருத்திச் சங்கங்கள் எதுவும் இதுவரை காலமும் பதிவு செய்யப்படவில்லை எனவும் முதன் முதலாக பதிவு செய்யப்பட்ட சூரிய பெண்கள் அபிவிருத்தி சங்கத்தின் மூலம் குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவை அபிவிருத்தி பாதைக்கு இட்டுச்செல்லலாம் என்ற நம்பிக்கை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் நிர்வாகக் குழுவினர். தெரிவித்தனர்.

இந் நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தரால் சங்கத்தின் பதிவுச் சான்றிதழ் நிர்வாகக் குழுவினரிடம் வழங்கி வைக்கப்பட்டதுடன் அதி காரிகளுக்கு அவர்களின் மக்கள் சேவையை பாராட்டும் முகமாக சங் கத்தினால் நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## காயத்ரியின் ‘இருட்டின் காதலி’ கவிதை நூல் வெளியீட்டு விழா



*காயத்ரியின் ‘இருட்டின் காதலி’ கவிதை நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4.30க்கு நடைபெறவுள்ளது.*

*இல. 24, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்(யாழ். இந்துக்கல்லூரி முன்பாக) எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.*

*இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமையில், கருத்துரையை அகஞ்சுரக்கும் தொகுதி விசேட மருத்துவ நிபுணர் ம.அரவிந்தன், கவிதை வாசிப்பை செ.ராகவேந்தன், நூல் அறிமுக உரையை ஆசிரியர் சிறீலேகா பேரின்பகுமார், நூல் மதிப்பீட்டுரையை பேராசிரியர் ச.முகுந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2024இல் வெளியிடப்பெற்றது.